# தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.02.2013 A.M**

---

## பூச்சி மருந்துடன் ஆட்சியரை முற்றுகையிட்ட முந்திரி விவசாயிகள்

தானே புயலால் முற்றுலுமாக பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு மறுவாழ்வு திட்டத்தை செயல்படுத்த தாமதிப்பதைக் கண்டித்து பூச்சி மருந்து பாட்டிலுடன் விவசாயிகள் ஆட்சியரை முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது: விவசாயிகளுக்காக முதல்வர் ஜெயலலிதா கொண்டுவந்த சிறப்பு தொகுப்புத்திட்டம் விவசாயிகளுக்கு எந்தவித பயனும் அளிக்கவில்லை. வறட்சி நிவாரணமாக அரசு அறிவித்துள்ள நிவாரண தொகை விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடையவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் கிடைக்கும் வகையில் டெல்டா பாசனப் பகுதிகளில் உடனடியாக மறு கணக்கெடுப்பை துரிதப்படுத்தவேண்டும்.

தானே புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகையில் பெருமளவு முறைகேடு நடந்துள்ளது. பரிந்துரைக் கடிதம் கொடுத்து முறைகேட்டில் ஈடுபட்ட விருத்தாசலத்தை சேர்ந்த 2 கிராம நிர்வாக அலுவலர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முந்திரி விவசாயிகளின் மறுவாழ்வுக்கென முதல்வர் ஒதுக்கிய ரூ.850 கோடியில், ரூ.300 கோடி வரை முறைகேடு நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்தப்படவேண்டும். மேலும் அதிகாரிகள் கொடுத்துள்ள அறிக்கையின்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை விவசாயிகளிடம் தனித்தனியாக விசாரணை நடத்தவேண்டும்.

விருத்தாசலம் வட்டம் சத்தியவாடி கிராமத்தில் வெல்லிங்டன் வாய்க்கால் பாசன வாய்க்காலை தனியார் ஒருவர் ஆக்கிரமித்துள்ளார். இதனால் கடந்த 2 ஆண்டுகளாக 3.5 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய முடியாமல் தரிசாகக் கிடக்கிறது.

இந்த இடத்தை ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற கோட்டாட்சியர் 2 முறை உத்தரவிட்டும், வட்டாட்சியர் இதுவரை கள ஆய்வு செய்யாமல் காலம் கடத்தி வருகிறார். இந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும்.

குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் அளிக்கும் எந்த கோரிக்கை மனுவுக்கும் பதில் கிடைப்பதில்லை. நேரடியாக அதிகாரிகளை சந்திக்க சென்றாலும், விவசாயிகளை பல மணிநேரம் காத்திருக்க வைத்து சந்திக்காமல் திருப்பி அனுப்புகின்றனர். அதிகாரிகளின் இத்தகைய செயல்கள் மாவட்ட நிர்வாகத்திறனுக்கு ஏற்றதல்ல.

புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி காடுகளை முழுவதுமாக அழித்துவிட்டு புதிதாக கன்றுகளை நடும் திட்டத்தை அரசு அறிவித்தது. இதனால் கடலூர் மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் முந்திரி மரங்கள் முழுமையாக வெட்டப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்துக்கொடுத்து, புதிய ரக முந்திரி கன்றுகளை நட 75 சத மானியம் வழங்கப்படும் என அரசு அறிவித்தது. ஆனால் இந்த திட்டம் இதுவரை தொடங்கப்படவில்லை. இதனால் அரசு அறிவிப்பை நம்பி மரத்தை வெட்டிய விவசாயிகள் இப்போது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இந்த திட்டத்தை உடனடியாக செயல்படுத்த முன்வரவேண்டும். மேலும் முந்திரி காடுகளை இழந்துள்ள விவசாயிகள் அனைவருக்கும் உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி ஆட்சியரிடம் முறையிட்ட விவசாயிகள் கையில் பூச்சிக்கொல்லி மருந்து பாட்டிலை கொண்டுவந்தனர். உடனடியாக நிவாரணம் வழங்கி, புதிய நடவு திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இல்லையெனில் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்துகொள்வதை தவிர வேறுவழியில்லை எனத் தெரிவித்தனர். இதனால் குறைதீர்க்கும் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

## ரூ.80 லட்சத்தில் கால்நடை மருத்துவஆராய்ச்சி மையம் திறப்பு

விழுப்புரம் மருதூரில் ரூ.80 லட்சம் செலவில், கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மையத்தை முதல்வர் ஜெயலலிதா புதன்கிழமை திறந்து வைத்தார்.

2012-13-ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் மேலும் 3 புதிய கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் தொடங்க முதல்வர் ஜெயலலிதா ரூ.2.40 கோடி ஒதுக்கீடு செய்தார்.

அதன்படி தலா ரூ. 80 லட்சம் வீதம், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட கால்நடை ஆராய்ச்சி மையங்களை முதல்வர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலமாக புதன்கிழமை திறந்து வைத்தார்.

இதன்படி விழுப்புரம் மருதூரில் ஏற்கனவே கால்நடை மருத்துவமனை செயல்படும் மருத்துவமனையில் தற்காலிகமாக கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மையம் திறக்கப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி மையம், மாவட்டத்திலுள்ள கிராமப்புற கால்நடை வளர்ப்போரின் வருமானத்தை உயர்த்தும் வகையில் கால்நடை வளர்ப்பில் நவீன தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கவும்,

விவசாயிகளுக்கு களத்தில் ஏற்படும் பிரச்னைகளை உடனுக்குடன் அறிந்து தீர்வு காணவும் பெரிதும் உதவும். மேலும் அந்தந்த மாவட்டங்களில் நிலவும் கிராமப்புற சூழலுக்கு ஏற்ப கறவை மாடு, ஆடு, கோழி வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வருவாய் பெருகி கிராமப்புற பொருளாதாரம் உயர்வதற்கு வாய்ப்புகள் உருவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடத்தப்பட்ட கால்நடை முகாமில் நூற்றுக்கணக்கான கால்நடைகளுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டன.

சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, ஓராண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, புதுப்புதூர் கிராமத்தில் உள்ள அம்பேத்கர் சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன வளாகத்தில் நடத்தப்பட்ட முகாமை, நிறுவன செயலாளர் சுவாமி தத்பிரபானந்தர் தொடங்கி வைத்தார்.

முன்னதாக வேளாண்மை பட்டயப் படிப்பு மாணவர்கள், சுற்றியுள்ள 5 கிராமங்களுக்குச் சென்று விவசாயிகள் பராமரித்து வரும் கால்நடைகள் மற்றும் நாட்டுக் கோழிகள் பற்றி கணக்கெடுத்தனர். கூடுதலாக, 50 விவசாயிகளின் நிலங்களில் மண் மாதிரிகள் சேகரித்து, அதன் பேரூட்டச் சத்து, நுண்ணூட்டச் சத்து ஆகியவற்றின் அளவை சோதனைக் கூடம் மூலம் ஆய்வு செய்தனர்.

அது குறித்த விவரங்கள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் அடுத்த பயிரை தேர்ந்தெடுக்கவும், தேவையான எரு, உரம் இடுவதற்கும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

134 மாடுகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல், சினைப் பரிசோதனை, கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன. 113 செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டன.

113 நாட்டுக் கோழிகளுக்கு வெள்ளை கழித்தல் நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன. 10 விவசாயிகளுக்கு கோமிக்ஷி புல் தூர்கள் விநியோகம் செய்யப்பட்டன.

முகாமில் முதல்வர் எஸ்.சங்கரலிங்கம், கால்நடைகள் பராமரிப்பு, நோய் தாக்கும் முன் பாதுகாக்கும் முறைகள் போன்றவற்றை விவசாயிகளுக்கு விளக்கினார். கோவனூர், அரசு கால்நடை டாக்டர் தமிழரசன் முகாமில் பங்கேற்று சிகிச்சைகள் அளித்தார். விரிவுரையாளர் ராம்குமார் நன்றி கூறினார்.

## 28-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கோவை மாவட்ட விவசாயிகளின் குறைதீர் கூட்டம் பிப்ரவரி 28-ஆம் தேதி ஆட்சியர் மு.கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள முதன்மை கூட்ட அரங்கில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் வேளாண்மை தொடர்பான பிரச்னைகள் குறித்து விவசாயிகள் நேரடியாக புகார் அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாராபுரம் கடலை வியாபாரி மனு தள்ளுபடி

திருப்பூர் மாவட்டம், தாராபுரம்-பழனி சாலையில் வசிப்பவர் கடலை வியாபாரி ராமலிங்கம். இவரது வீட்டில் கடந்த டிசம்பர் 31 ஆம் தேதி நடத்திய சோதனையில் ரூ.27,500 கோடி மதிப்புள்ள அமெரிக்க கடன் பத்திரங்களை வருமான வரித்துறையினர் பறிமுதல் செய்ததாகக் கூறப்படுகிறது.

பல முக்கிய ஆவணங்களையும் கைப்பற்றிச் சென்றனர். பறிமுதல் செய்யப்பட்ட கடன் பத்திரங்கள் போலியானவை என அறிவித்த வருமான வரித்துறையினர், இதுதொடர்பாக தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், வருமான வரித்துறையினர்

கைப்பற்றிச் சென்ற ஆவணங்களை திரும்ப ஒப்படைக்கக் கோரி தாராபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றத்தில் ராமலிங்கம் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரித்த நீதித்துறை நடுவர் ஸ்ரீராமஜெயம், மனுவை தள்ளுபடி செய்து வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

## எரிவாயுக் குழாய் திட்டம் குறித்து ஈரோட்டில் நாளை விவசாயிகள் ஆலோசனை

குழாய் மூலம் எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (நாளை) ஈரோட்டில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஈரோடு எம்.பி. கணேசமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை:

வருகிற 25-ஆம் தேதி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், எரிவாயுக் குழாய் திட்டத்தால் பாதிக்கப்படும் விவசாயிகள் மற்றும் அரசுத்துறை அதிகாரிகளிடையே பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கூட்டமைப்பு சார்பில் பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகள் பற்றி விவாதிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டத்தில் விவசாயிகளும், கூட்டமைப்பில் இணைந்து செயல்பட விருப்பமுள்ள அமைப்புகளின் நிர்வாகிகளும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 33.35 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 268 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.53 டி.எம்.சி.

## குப்பனத்தம் அணை பாசனத்துக்கு திறப்பு

திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தை அடுத்த குப்பனத்தம் அணையிலிருந்து பாசனத்துக்கான தண்ணீரை திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் ச.வளர்மதி வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியது:

குப்பனத்தம் அணையின் நீர்மட்டம் 59 அடியாகும். தற்போது அணையில் 40.32 அடி தண்ணீர் உள்ளது. அணையின் மொத்த கொள்ளளவு 700 மில்லியன் கன அடியாகும். இப்போது அணையில் 302.02 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது.

இப்போது உள்ள தண்ணீரை பிப்ரவரி 22 முதல் மார்ச் 7ஆம் தேதி வரை 13 நாள்களுக்கு நாள் ஒன்றுக்கு 15 மில்லியன் கன அடி வீதம் தொடர்ந்து திறந்து விடப்படும்.

இந்த அணை கால்வாய் வழியாக வெளியேறும் தண்ணீர், செங்கம் வட்டத்தில் உள்ள 15 ஏரிகளின் மூலம் 3036 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எனவே விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்றார்.

கீழ்பென்னாத்தூர் எம்எல்ஏ ஏ.கே. அரங்கநாதன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் எம்.எஸ்.நைனாக்கண்ணு, மாவட்ட வணிகவரித் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் ஆர். மதியழகன், செங்கம் ஒன்றியக்குழுத் தலைவர் எம்.கணேசன், மாவட்ட கவுன்சிலர்கள் வெங்கட்ராமன், ஜோதிகிருஷ்ணமூர்த்தி, தலைமைக் கழகப் பேச்சாளர் வெங்கட்ராமன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயற்பொறியாளர் நடராஜ், உதவி செயற்பொறியாளர்கள் திம்மன், கோபி, வட்டாட்சியர் ராஜலட்சுமி, ஒன்றிய கவுன்சிலர் வெண்ணிலா, ஊராட்சி மன்றத் தலைவர் கல்லாத்தூர் சிவானந்தம் உள்பட அரசுத்துறை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

## நாமக்கல்லில் முட்டை கொள்முதல் விலை இரு நாள்களில் 10 காசுகள் உயர்வு

தீவன மூலப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக, நாமக்கல் மண்டலத்தில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை இரு நாள்களில் 10 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.80-ஆக நிர்ணயிக்கப்பட்டது.

மேலும், இனிமேல் சந்தை நிலவரத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல், உற்பத்திச் செலவையும் கணக்கிட்டு முட்டைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்யவும் நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு முடிவு செய்துள்ளது.

பருவமழை குறைந்து நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டுள்ளதால் பரவலாகத் தீவன உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, சோயா, மக்காச்சோளம் ஏற்றுமதி செய்வது தொடர்வதால் உள்நாட்டில் தீவன மூலப் பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு விலையும் பெருமளவில் உயர்ந்துள்ளது.

வேலையாள்கள் பற்றாக்குறை, கோழிகளுக்கான மருந்துகள் விலையேற்றம், பண்ணைகள் கட்ட கட்டுமானப் பொருள்கள் விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளதால் கோழி முட்டை உற்பத்திச் செலவு முட்டைக்கு ரூ.3.60 முதல் ரூ.3.75ஆக உயர்ந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், முட்டைக் கொள்முதல் விலை ரூ.4-க்கு குறையாமல் இருந்தால் மட்டுமே கோழிப் பண்ணைத் தொழிலை லாபகரமாக இயக்க முடியும் என்பதால் முட்டை உற்பத்திச் செலவை ஈடுசெய்திடும் வகையில், முட்டை பண்ணைக் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக நாமக்கல் மண்டல என்இசிசி தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், வியாழக்கிழமை 3 காசுகளும், வெள்ளிக்கிழமை 7 காசுகளும் உயர்த்தப்பட்டு முட்டை பண்ணைக் கொள்முதல் விலை ரூ.3.80-க நிர்ணயிக்கப்பட்டது. மேலும், தீவன மூலப்பொருள்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் முட்டை கொள்முதல் விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து என்இசிசி நாமக்கல் மண்டலத் தலைவர் பி.செல்வராஜ் கூறியது:

தீவன விலையேற்றம் மட்டுமன்றி நாடு முழுவதும் பரவலாக முட்டை நுகர்வு அதிகரித்து வருவதாலும், அதற்கு மாறாக தினசரி முட்டை உற்பத்தி குறைந்துள்ளதாலும் முட்டைக் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு வருகிறது.

தீவன மூலப் பொருள்கள் பற்றாக்குறையைச் சமாளிக்க பண்ணைகளில் 65 வாரங்களுக்கு மேற்பட்ட கோழிகளை கழிவுக் கோழிகளாக இறைச்சிக்கு அனுப்பவும் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து அதிகரித்து வரும் தீவன மூலப் பொருள்களின் விலை காரணமாக, இனிமேல் முட்டைக் கொள்முதல் விலையை நிர்ணயிப்பதில் சந்தை நிலவரத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல் உற்பத்திச் செலவையும் கணக்கிட்டு நிர்ணயம் செய்யப்படும் என்றார் அவர்.

பிற மண்டங்களில் விலை நிலவரம்: ஹைதராபாத் -ரூ.3.51, விஜயவாடா -ரூ.3.51, பர்வாலா -ரூ.3.80, ஹோஸ்பெட் -ரூ.3.50, சென்னை -ரூ.3.78, மைசூர் -ரூ.3.69, பெங்களூர் -ரூ.3.65, மும்பை -ரூ.3.84, தில்லி ரூ.4, கொல்கத்தா -ரூ.4.05.

## வறட்சி நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வலியுறுத்தல்

டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, வறட்சி நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என தேசியவாத காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இக் கட்சியின் மாநில சிறப்பு செயற்குழுக் கூட்டம் அண்மையில் கரூரில் நடைபெற்றது. கூட்டத்துக்கு கட்சியின் மாவட்டத் தலைவர் சு. தங்கதுரை தலைமை வகித்தார். மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர் த. காளிமுத்து முன்னிலை வகித்தார்.

கட்சியின் மாநில தலைவர் மதுகாந்த், துணைத் தலைவர் என்.வி. சுப்பிரமணியன், பொதுச் செயலர் ஆர். வெங்கடேசன், அமைப்புச் செயலரும், தொழிற்சங்கச் செயலருமான வி.பி. வேல்முருகன் ஆகியோர் சிறப்பித்துப் பேசினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கரூர் மாவட்டத்தில் நடைபெறும் மணல் கொள்ளையை தடுக்க வேண்டும். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் உள்ள லாலாபேட்டையில் ரயில்வே கேட் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதால், பள்ளி, கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சுமார் 3 கி.மீ. சுற்றிச் செல்லும் நிலை உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி தெற்கு ரயில்வே இந்தக் கேட்டை உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு, தொடங்கப்படாமல் உள்ள பசுபதிபாளையம் ரயில்வே சுரங்கப் பாதை திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். பசுபதிபாளையம் அமராவதி ஆற்றின் குறுக்கே உயர்நிலை பாலம் கட்ட உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படாமல் உள்ளது. உடனடியாக இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகளை தொடங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநிலச் செயலர்கள் வி. முத்து, சதாசிவம், மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர். ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 33.67 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 33.67 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3,432 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 596 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் வினாடிக்கு 75 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

23.02.2013 A.M

---

## நவீன வைக்கோல் கட்டும் இயந்திரம்ரூ.3.62 லட்சம் மதிப்பில் வழங்கல்

பெரம்பலூர்: பெரம்பலூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் நடந்தது. கூட்டத்தில் விவசாயிகள், ஆக்கிரமிப்பு அகற்றம், பாசன வசதி, உர வினியோகம், ஆலைகளில் கரும்புக்கு குறித்த நேரத்தில், விவசாயிகளுக்கு பணம் அளிக்க கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை கலெக்டரிடம் கொடுத்தனர். கூட்டத்தில் கலெக்டர் தரேஷ்அஹமது பேசியதாவது:பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் உணவு பொருட்களை உற்பத்தி செய்வதோடு நின்று விடுவதால், குறைந்த அளவு மட்டுமே வருமானம் ஈட்டுகின்ற சூழ்நிலை உள்ளது. உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு அரசு பல்வேறு உதவிகளை செய்கிறது.
பெரம்பலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் மக்காச்சோளம், 3 லட்சம் மெட்ரிக் டன், சிறிய வெங்காயம், 80 ஆயிரம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றிலிருந்து மதிப்பு கூட்டும் தொழில்களை மேற்கொள்ளலாம்.

எனவே விவசாயிகள் தாங்கள் கூட்டாக இணைந்தோ, தங்கள் பிள்ளைகள் தொழில் துவங்க உதவி செய்தோ, தங்கள் பகுதியின் விவசாய பொருட்களை கொண்டு, மதிப்பு கூட்டப்பட்ட உணவு பொருட்களை உற்பத்தி செய்து, தாங்கள் மட்டுமல்லாது, தங்கள் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும் உதவ வேண்டும்.இதற்கு மாவட்ட நிர்வாகம் அரசின் மூலம் பெறக்கூடிய அனைத்து சலுகைகளையும், வங்கி கடன் உதவிகளையும் பெற்றுத்தரும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.

கூட்டத்தில் வயலில் அறுவடை செய்யப்பட்ட பின் உள்ள வைக்கோலை கட்டுகளாக கட்டுவதற்கான, ஒரு லட்சத்து, 72 ஆயிரத்து, 500 ரூபாய் அரசு மானியத்துடன் கூடிய, 3 லட்சத்து, 62 ஆயிரத்து, 250 ரூபாய் மதிப்பிலான வைக்கோல் கட்டும் இயந்திரத்தை, தொண்டமாந்துறையைச் சேர்ந்த விவசாயி ரகுபதிக்கு கலெக்டர் தரேஷ்அஹமது வழங்கினார். கூட்டத்தில் டி.ஆர்.ஓ., சுப்பிரமணியன், மின்வாரிய எஸ்.இ., வளர்மதி, வேளாண்மை இணை

இயக்குனர் சங்கரலிங்கம், கூட்டுறவு இணை பதிவாளர் உமாமகேஸ்வரி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## சூப்பர் பாஸ்பேட் உரத்துக்கு கடும் தட்டுப்பாடு! குறைதீர் கூட்டத்தில் குற்றச்சாட்டு

நாமக்கல்: "பெரும்பாலான பயிர்களுக்கு, சூப்பர் பாஸ்பேட், அடி உரமாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால், சூப்பர் பாஸ்பேட் உரம், மாவட்டத்தில் எந்த தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் இல்லை' என, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது.நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்தார். கூட்டத்தில் நடந்த விவாதம் பின்வருமாறு:சந்திரசேகர் (கல்குறிச்சி): ராசிபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட மெட்டாலா, நாமகிரிப்பேட்டை உள்ளிட்ட பகுதியில், விளை நிலங்களில் கருந்தழை பூச்சி தாக்கம் அதிகமாக உள்ளது.பிரபாகரன் (வேளாண் இணை இயக்குனர்): ஒட்டுண்ணி மூலம் கருந்தழை பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை பகுதியில் தாக்கம் அதிகம் உள்ளது. அவற்றை கட்டுப்படுத்த, சம்மந்தப்பட்ட வட்டார வேளாண் துணை இயக்குனர்களை, விவசாயிகள் அணுகி, ஆலோசனை பெறலாம்.ராயப்பன் (சேந்தமங்கலம்): சேந்தமங்கலம் அருகே பொட்டணம் சுற்றுவட்டாரத்தில், கழிவு மண்ணில் இருந்து தங்கத் துகள்கள் பிரித்தெடுக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. அவற்றில் இருந்து வெளியேற்றப்படும் ரசாயன கழிவு நீரால், விளை நிலங்கள் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, தென்னை மரங்கள், அதிக பாதிப்புக்குள்ளாகி வருகிறது.கலெக்டர்: மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலம் ஆய்வு செய்து, சம்மந்தப்பட்ட தொழில் மேற்கொள்வோருக்கு தக்க ஆலோசனை வழங்கப்படும். தொடர்ந்து செயல்பட்டால், அவற்றை மூடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.பூபாலன் (பழையபாளையம்): நாமக்கல் மாவட்டம், தொடர்ந்து வறட்சி மாவட்டமாக உள்ளது. சேந்தமங்கலம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில், நிலத்தடி நீரின் அளவு குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சூழலில், கொல்லிமலை அடிவாரமான புதுக்கோம்பையில், தடுப்பணை கட்ட வேண்டும்.கலெக்டர்: மனு கொடுத்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.நடேசன் (கொல்லப்பட்டி, திருச்செங்கோடு): எங்கள் பகுதியில், நிலத்தடி நீர் முழுவதுமாக மாசுபட்டுள்ளது. அதனால், ஏராளமான தென்னை மரங்கள் கருகியுள்ளது. விவசாயமும் பாதிப்படைந்துள்ளது. நீர் மேலாண்மை திட்டம் மூலம், நீர் மறு சுழற்சி செய்வதற்கு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம், நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.கலெக்டர்: கொல்லப்பட்டி கிராமத்தில், வேளாண் அறிவியல் நிலையத்தினர் ஆய்வு மேற்கொள்வர். ப.வேலூர் அருகே உள்ள வடகரையாத்தூர் போல், கொல்லப்பட்டி கிராமத்தையும், வேளாண் அறிவியல் நிலையத்தினர் தத்தெடுக்க வாய்பிருந்தால், தத்தெடுத்து, உரிய நடவடிக்கை மேற்கொள்வர்.முருகேசன் (தமிழக

உழவர் முன்னேற்ற சங்கம், கல்குறிச்சி): பெரும்பாலான பயிர்களுக்கு, சூப்பர் பாஸ்பேட், அடி உரமாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால், சூப்பர் பாஸ்பேட் உரம், மாவட்டத்தில் எந்த தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் இல்லை. அவற்றை வழங்க, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

முத்துகுமாரசாமி (இணைப் பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள்): சூப்பர் பாஸ்பேட் உரம் கையிருப்பு உள்ளது. அவற்றை, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ்வாறு விவாதம் நடந்தது.கலெக்டர்எச்சரிக்கைவிவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அளிக்கப்படும் மனுக்களுக்கு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய பதில் அளிக்க வேண்டும். அதுகுறித்த தகவலையும், மனுதாரருக்கு தெரியப்படுத்த வேண்டும். இதுபற்றி பலமுறை சொல்லியும், மனுக்களுக்கு பதில் அளிப்பதில்லை. இது தொடர்ந்தால், அரசாணைப்படி, சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## வெங்காய ஏற்றுமதிக்கு தடை இல்லை: மத்திய அரசு:விலை குறைந்து வருவதால்...



புதுடில்லி:வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதிக்க, திட்டம் எதுவும் இல்லை என, மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் தாரிக் அன்வர், பார்லிமென்டில் தெரிவித்தார்.

கர்நாடகா:காலம் தவறிய மழைப் பொழிவால், வெங்காயம் அதிகளவில் சாகுபடி செய்யப்படும் மகாராஷ்டிரா, கர்நாடகா, குஜராத் ஆகிய மாநிலங்களில், இதன் சாகுபடி பரப்பளவு குறைந்ததுடன், இதன் வரத்தும், சரிவடைந்து போனது.இதனால், கடந்த ஆண்டு நவம்பர் முதல் நடப்பு ஆண்டு ஜனவரி மாதம் வரையிலுமாக, வெங்காயத்தின் விலை, தொடர்ந்து உயர்ந்து வந்தது.

குறிப்பாக, நடப்பு மாதத்தின் தொடக்கத்தில், மகாராஷ்டிராவின் நாசிக் மொத்த விலை சந்தையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 25 ரூபாயாக மிகவும் அதிகரித்திருந்தது.இந்நிலையில், தற்போது, சந்தைக்கு வெங்காய வரத்து அதிகரித்துள்ளதுடன், மொத்த விலை சந்தையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 16 ரூபாயாக சரிவடைந்து உள்ளது. இதே போன்று, டில்லியிலும் இதன் விலை, 25 ரூபாயிலிருந்து, 17.50 ரூபாயாக குறைந்துள்ளது.எனவே, வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட மாட்டாது என, அமைச்சர் மேலும் கூறினார்.உற்பத்தி குறைந்து

போனதையடுத்து, கடந்த நவம்பர் மாதம் வரை, வெங்காய வரத்து மிகவும் குறைந்து போயிருந்தது.இதனால், சென்ற ஜனவரி மாதத்தில், நாட்டின் வெங்காய ஏற்றுமதி, 83,044 டன்னாக மிகவும் சரிவடைந்திருந்தது.

இது, கடந்த, 2012ம் ஆண்டு, ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (1.47 லட்சம் டன்) விட, 40 சதவீதம் குறைவாகும்.சாகுபடி பரப்பு:காலம் தவறிய மழைப் பொழிவால், நாட்டின் வெங்காய சாகுபடி பரப்பளவு, நடப்பு பருவத்தில், 10 சதவீதம் குறைந்து, 10.87 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.இருப்பினும், நடப்பு பருவத்தில், வெங்காயம் உற்பத்தி, கடந்த ஆண்டு உற்பத்தி அளவான, 1.74 கோடி டன்னாக இருக்குமென, நாசிக்கில் உள்ள தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்து உள்ளது.

## நவீன வைக்கோல் கட்டும் இயந்திரம்ரூ.3.62 லட்சம் மதிப்பில் வழங்கல்

பெரம்பலூர்: பெரம்பலூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் நடந்தது. கூட்டத்தில் விவசாயிகள், ஆக்கிரமிப்பு அகற்றம், பாசன வசதி, உர வினியோகம், ஆலைகளில் கரும்புக்கு குறித்த நேரத்தில், விவசாயிகளுக்கு பணம் அளிக்க கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை கலெக்டரிடம் கொடுத்தனர். கூட்டத்தில் கலெக்டர் தரேஷ்அஹமது பேசியதாவது:பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் உணவு பொருட்களை உற்பத்தி செய்வதோடு நின்று விடுவதால், குறைந்த அளவு மட்டுமே வருமானம் ஈட்டுகின்ற சூழ்நிலை உள்ளது. உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு அரசு பல்வேறு உதவிகளை செய்கிறது.
பெரம்பலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் மக்காச்சோளம், 3 லட்சம் மெட்ரிக் டன், சிறிய வெங்காயம், 80 ஆயிரம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றிலிருந்து மதிப்பு கூட்டும் தொழில்களை மேற்கொள்ளலாம்.

எனவே விவசாயிகள் தாங்கள் கூட்டாக இணைந்தோ, தங்கள் பிள்ளைகள் தொழில் துவங்க உதவி செய்தோ, தங்கள் பகுதியின் விவசாய பொருட்களை கொண்டு, மதிப்பு கூட்டப்பட்ட உணவு பொருட்களை உற்பத்தி செய்து, தாங்கள் மட்டுமல்லாது, தங்கள் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளின் முன்னேற்றத்திற்கும் உதவ வேண்டும்.இதற்கு மாவட்ட நிர்வாகம் அரசின் மூலம் பெறக்கூடிய அனைத்து சலுகைகளையும், வங்கி கடன் உதவிகளையும் பெற்றுத்தரும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.

கூட்டத்தில் வயலில் அறுவடை செய்யப்பட்ட பின் உள்ள வைக்கோலை கட்டுகளாக கட்டுவதற்கான, ஒரு லட்சத்து, 72 ஆயிரத்து, 500 ரூபாய் அரசு மானியத்துடன் கூடிய, 3 லட்சத்து,

62 ஆயிரத்து, 250 ரூபாய் மதிப்பிலான வைக்கோல் கட்டும் இயந்திரத்தை, தொண்டமாந்துறையைச் சேர்ந்த விவசாயி ரகுபதிக்கு கலெக்டர் தரேஷ்அஹமது வழங்கினார். கூட்டத்தில் டி.ஆர்.ஓ., சுப்பிரமணியன், மின்வாரிய எஸ்.இ., வளர்மதி, வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம், கூட்டுறவு இணை பதிவாளர் உமாமகேஸ்வரி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### மிளகாய் வத்தல் விலை உயர்வு

மேட்டூர்: கொளத்தூர் சந்தையில் நேற்று மிளகாய் வத்தல் விலை அதிகரித்த நிலையில், வரத்து குறைவாக இருந்த போதிலும், பருத்தி விலை வீழ்ச்சியடைந்தது விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியது.ஆண்டுதோறும் ஜனவரி இறுதியில் கொளத்தூர் சுற்றுப்பகுதியில் மிளகாய் அறுவடை துவங்கும். மிளகாயை உலர வைத்து வத்தலாக்கி விவசாயிகள் விற்பனைக்காக கொளத்தூர் சந்தைக்கு கொண்டு வருவர்.கடந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் கொளத்தூர் பகுதியில் வழக்கத்தை விட மிளகாய் சாகுபடி பரப்பு, 40 சதவீதம் வரை குறைந்து விட்டது. தற்போது அறுவடை துவங்கிய நிலையில், சந்தைக்கு மிளகாய் வத்தல் விற்பனைக்கு வர துவங்கியுள்ளது.

நடப்பாண்டு ஃபிப்ரவரி முதல்வாரம் கொளத்தூர் சந்தைக்கு விற்பனைக்கு வந்தபோது அதிகபட்சமாக, ஒரு கிலோ மிளகாய் வத்தல், 80 ரூபாய்க்கு விற்பனையானது. இரு வாரத்துக்கு பின், நேற்று சந்தையில் ஒரு கிலோ மிளகாய் வத்தல், 85 முதல் அதிகபட்சம், 110 ரூபாய் வரை விற்பனையானது.மிளகாய் வத்தல் விலை அதிகபட்சம், 30 ரூபாய் அதிகரித்திருப்பதும், விலை ஏறுமுகமாக இருப்பதும் விவசாயிகளுக்கு சற்று ஆறுதல் தந்துள்ளது. எனினும், கிலோ, 150 ரூபாய்க்கு மேல் விற்றாமல் மட்டுமே தங்களுக்கு லாபம் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.பருத்தி சீஸன் நீடிக்கும் நிலையில், சுற்றுப்பகுதி கிராமங்களில் இருந்து நேற்று கொளத்தூர் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, 500 மூட்டைக்கும் மேல் பருத்தி விற்பனைக்கு வந்தது. 2011ல் கிலோ, 80 ரூபாய் வரை விற்பனையான பருத்தி கடந்த ஆண்டு ஒரு கிலோ, 45 ரூபாயாக வீழ்ச்சியடைந்தது.நடப்பாண்டு வறட்சி காரணமாக பருத்தி வரத்து குறைந்தபோதிலும், நேற்று ஒரு கிலோ பருத்தி தரத்தை பொறுத்து, 35 ரூபாய் முதல் அதிகபட்சம், 42 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த மூன்று ஆண்டுகளில் பருத்தி விலை படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருவது விவசாயிகளை ஏமாற்றத்தில் ஆழ்த்தியது.

## சூப்பர் பாஸ்பேட் உரத்துக்கு கடும் தட்டுப்பாடு! குறைதீர் கூட்டத்தில் குற்றச்சாட்டு

நாமக்கல்: "பெரும்பாலான பயிர்களுக்கு, சூப்பர் பாஸ்பேட், அடி உரமாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால், சூப்பர் பாஸ்பேட் உரம், மாவட்டத்தில் எந்த தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் இல்லை' என, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது.நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்தார். கூட்டத்தில் நடந்த விவாதம் பின்வருமாறு:சந்திரசேகர் (கல்குறிச்சி): ராசிபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட மெட்டாலா, நாமகிரிப்பேட்டை உள்ளிட்ட பகுதியில், விளை நிலங்களில் கருந்தழை பூச்சி தாக்கம் அதிகமாக உள்ளது.பிரபாகரன் (வேளாண் இணை இயக்குனர்): ஒட்டுண்ணி மூலம் கருந்தழை பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை பகுதியில் தாக்கம் அதிகம் உள்ளது. அவற்றை கட்டுப்படுத்த, சம்மந்தப்பட்ட வட்டார வேளாண் துணை இயக்குனர்களை, விவசாயிகள் அணுகி, ஆலோசனை பெறலாம்.ராயப்பன் (சேந்தமங்கலம்): சேந்தமங்கலம் அருகே பொட்டணம் சுற்றுவட்டாரத்தில், கழிவு மண்ணில் இருந்து தங்கத் துகள்கள் பிரித்தெடுக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. அவற்றில் இருந்து வெளியேற்றப்படும் ரசாயன கழிவு நீரால், விளை நிலங்கள் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, தென்னை மரங்கள், அதிக பாதிப்புக்குள்ளாகி வருகிறது.கலெக்டர்: மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலம் ஆய்வு செய்து, சம்மந்தப்பட்ட தொழில் மேற்கொள்வோருக்கு தக்க ஆலோசனை வழங்கப்படும். தொடர்ந்து செயல்பட்டால், அவற்றை மூடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.பூபாலன் (பழையபாளையம்): நாமக்கல் மாவட்டம், தொடர்ந்து வறட்சி மாவட்டமாக உள்ளது. சேந்தமங்கலம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில், நிலத்தடி நீரின் அளவு குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சூழலில், கொல்லிமலை அடிவாரமான புதுக்கோம்பையில், தடுப்பணை கட்ட வேண்டும்.கலெக்டர்: மனு கொடுத்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.நடேசன் (கொல்லப்பட்டி, திருச்செங்கோடு): எங்கள் பகுதியில், நிலத்தடி நீர் முழுவதுமாக மாசுபட்டுள்ளது. அதனால், ஏராளமான தென்னை மரங்கள் கருகியுள்ளது. விவசாயமும் பாதிப்படைந்துள்ளது. நீர் மேலாண்மை திட்டம் மூலம், நீர் மறு சுழற்சி செய்வதற்கு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம், நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.கலெக்டர்: கொல்லப்பட்டி கிராமத்தில், வேளாண் அறிவியல் நிலையத்தினர் ஆய்வு மேற்கொள்வர். ப.வேலூர் அருகே உள்ள வடகரையாத்தூர் போல், கொல்லப்பட்டி கிராமத்தையும், வேளாண் அறிவியல் நிலையத்தினர் தத்தெடுக்க வாய்பிருந்தால், தத்தெடுத்து, உரிய நடவடிக்கை மேற்கொள்வர்.முருகேசன் (தமிழக உழவர் முன்னேற்ற சங்கம், கல்குறிச்சி): பெரும்பாலான பயிர்களுக்கு, சூப்பர் பாஸ்பேட், அடி உரமாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால், சூப்பர் பாஸ்பேட் உரம், மாவட்டத்தில் எந்த தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் இல்லை. அவற்றை வழங்க, நடவடிக்கை மேற்கொள்ள

வேண்டும்.முத்துகுமாரசாமி (இணைப் பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள்): சூப்பர் பாஸ்பேட் உரம் கையிருப்பு உள்ளது. அவற்றை, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ்வாறு விவாதம்
நடந்தது.கலெக்டர்எச்சரிக்கைவிவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அளிக்கப்படும் மனுக்களுக்கு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய பதில் அளிக்க வேண்டும். அதுகுறித்த தகவலையும், மனுதாரருக்கு தெரியப்படுத்த வேண்டும். இதுபற்றி பலமுறை சொல்லியும், மனுக்களுக்கு பதில் அளிப்பதில்லை. இது தொடர்ந்தால், அரசாணைப்படி, சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## முட்டை உற்பத்தி குறைவுஎன்.இ.சி.சி., சேர்மன் தகவல்

நாமக்கல்: "தீவனப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, நாடு முழுவதும் முட்டை உற்பத்தி குறைந்துள்ளது. முட்டை உற்பத்தி குறைவு, விலையேற்றத்துக்கு ஒரு காரணமாகும்' என, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் (என்.இ.சி.சி.,), நாமக்கல் மண்டல சேர்மன் டாக்டர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:
உத்திரபிரதேசம், பீஹார், மேற்கு வங்காளம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் முட்டை தேவை அதிகரித்துள்ளது. அதன் காரணமாக, கோல்கத்தா, பார்வாலா உள்ளிட்ட இடங்களில், முட்டை விலை, கணிசமாக ஏற்றம் கண்டுள்ளது. அதுபோல், விஜயவாடா, மேற்கு கோதாவாரி, ஹைதராபாத், ஹோஸ்பேட் போன்ற முட்டைக் கொள்முதல் இடங்களில், முட்டை விலை உயரத் துவங்கியுள்ளது.தமிழகத்தில், இறைச்சி விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களினால், முட்டை நுகர்வு ஏற்றம் காணத் துவங்கியுள்ளது.
அதன் காரணமாக, தமிழகத்தில் முட்டை விலை ஏற்றம் கண்டுள்ளது. கோழித்தீவன விலை உயர்வு, வேலையாட்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் முட்டை உற்பத்தி செலவு, 360 காசு முதல், 375 காசாக உயர்ந்துள்ளது.தீவனப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக, நாடு முழுவதும் முட்டை உற்பத்தி குறைந்துள்ளது. முட்டை உற்பத்தி குறைவு, விலையேற்றத்துக்கு ஒரு காரணமாகும். தவிர, தீவனப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த முடியாத நிலையில், கோழிப் பண்ணைத் தொழிலை தொடர்ந்து நடத்த, முட்டையின் விலையை உயர்த்த வேண்டியது அவசியமாகும்.இன்றைய சூழ்நிலையில், பண்ணையை நடத்த கட்டுப்படியாகக் கூடிய விலையாக, 400 காசுகளுக்கும் குறையாமல், முட்டை விலை இருந்தால் மட்டுமே, கோழிப் பண்ணைத் தொழிலை, லாபகரமாக நடத்த இயலும். தீவனப் மூலப்பொருட்கள் பற்றாக்குறையை சமாளிக்க, 65 வாரங்களுக்கு அதிகமான கோழிகளை, கழிவு கோழிகளாக, இறைச்சிக்கு விற்பனை செய்ய வேண்டும்.இந்திய அரசு, பறவைக் காய்ச்சல் தொற்று இல்லை என, அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளதால், நீண்ட

நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ஏற்றுமதி அனுமதி கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, முட்டை விலையில், மேலும் மாற்றம் வர வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறியள்ளார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்
23.02.2013 A.M

## மேட்டூர் அணை நீர்மட்டம் 32.94 அடியாக அதிகரிப்பு

மேட்டூர், : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 32.94 அடியாக அதிகரித்துள்ளது.
உச்சநீதிமன்ற உத்தரவின்படி கர்நாடகாவில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டு வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிக அளவில் இருந்து வருகிறது. மேட்டூருக்க நீர்வரத்து நேற்று காலை வினாடிக்கு 4,154 கனஅடியாக இருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 600 கனஅடி நீர் திறந்து விடப்படுகிறது.
அணைக்கு வரும் நீரின் அளவை விட திறப்பு குறைவாக உள்ளதால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 32.24 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 32.94 அடியாக அதிகரித்தது. நீர் இருப்பு 8.74 டி.எம்.சி.

## மாவட்டத்தில் தக்காளி விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை

கரூர்,:கரூர் மாவட்டத்தில் தக்காளி விலை சரிந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கரூர் மாவட்டத்தில் உப்பிடமங்கலம், வெள்ளியணை, தாந்தோணிமலை பகுதிகளில் தக்காளி அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் தக்காளி கரூர் உழவர்சந்தை மற்றும் காய்கறி விற்பனை கடைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதுதவிர ஒட்டன்சத்திரம் சந்தையில் இருந்தும் விற்பனைக்காக தக்காளி வரவழைக்கப்படுகிறது. கடந்தாண்டு மார்ச் மாதம் கரூர் உழவர்சந்தையில் கிலோ தக்காளி ரூ.10க்கு விற்பனையானது.
பின்னர் ரூ.18 ஆக அதிகரித்தது. ஆனால் இந்த ஆண்டு தக்காளிக்கு உரிய கிடைக்கவில்லை. கடந்த மாதம் வரை ரூ.15 என்ற அளவில் விற்பனை செய்யப்பட்ட தக்காளி படிப்படியாக விலை குறைந்து நேற்று கரூர் உழவர்சந்தையில் கிலோ ரூ.5க்கு விற்பனை செய்யப்பட்டது. விலை குறைவால் நுகர்வோர் மகிழ்ச்சியடைந்தாலும் தக்காளி சாகுபடி செய்யும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். அவ்வப்போது பெய்யும் மழை மற்றும் கிணற்றுப்பாசனம் மூலமாக தக்காளி பயிரிட்டோம். கிலோவுக்கு ரூ.10 ஆவது கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் ரூ.5 என குறைந்துவிட்டது. போக்குவரத்து செலவுக்கு கூட கட்டுப்படியாகவில்லை. மேலும்

பிறபகுதிகளிலும் இருந்து தக்காளி வரத்து அதிகரித்து விட்டது. இதனால் விலை கிடைக்கவில்லை என தக்காளி சாகுபடி விவசாயிகள் கூறினர்.

### மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் விவசாயிகள் வலியுறுத்தல்

கரூர்,:கரூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் முதல் வெயில் கொளுத்த தொடங்கி விட்டது. கடந்தாண்டு ஏப்ரல் மாதத்தில் கோடை மழை பெய்தது. சூறைக்காற்று மற்றும் மழையால் வாழை சாகுபடி பாதிக்கப்பட்டது. ஏராளமான வாழைப்பயிர்கள் காற்றில் சாய்ந்தன. இதற்கு நிவாரணம் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் பாதிக்கப்பட் வாழை விவசாயிகளுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை. காவிரியிலும் போதுமான நீர்வரத்து இல்லாமல் போனதால் மாவட்டத்தில் நெல், வாழை பயிர்கள் சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. காவிரி டெல்டா பகுதியில் வறட்சியால் 50 சதவீத பயிர் சேதம் அடைந்த பகுதிகளை கண்டறிந்து விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. தமிழக அரசின் உத்தரவில் குறிப்பிட்டபடி 50 சதவீதத்திற்கு மேல் மகசூல் பாதித்த மாவட்ட காவிரி டெல்டா பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட பயிர் விபரங்களை வேளாண்மைத்துறை, வருவாய்த்துறை அலுவலர்கள் கணக்கெடுக்கும் பணியல் ஈடுபட்டுள்ளனர். ஏற்கனவே பாதித்த பகுதியில் இந்த கணக்கெடுப்பு வேலை நடக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண தொகையை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேபோல் மாவட்டத்தில் கரூர் ஒன்றியத்தில் சில பகுதிகளிலும் நீரின்றி சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியையும் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். வறட்சி நிவாரணம் குறித்து கவுண்டம்பட்டியை சேர்ந்த விவசாயி சுப்பிரமணியன் கூறுகையில், மாவட்டத்தில் டெல்டா பாசன பகுதிகளான கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஒன்றியங்களில் வறட்சி நிவாரணம் வழங்க இருப்பதாக கூறுகின்றனர்.

இப்பகுதிகளை அதிகாரிகள் முழுமையாக ஆய்வு செய்து வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அனைத்து பகுதிகளையும் புதிதாக ஆய்வு செய்து கணக்கெடுப்பு செய்ய வேண்டும். பழைய சாகுபடி பரப்பு கணக்கு மட்டுமே சில இடங்களில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மாவட்டத்தில் சுமார் 12ஆயிரம்

ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் பெரும்பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே புதிதாக கணக்கெடுப்பு செய்து வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வாழப்பயிருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்றார். கரூர் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளில் வாழைப்பயிர் சூறைக்காற்றால் இருமுறை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது வறட்சியால் வாழை சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் இழப்பீடு என வரும்போது 50 சதவீதம் வாழை காற்றில் சாய்ந்து சேதம் அடைந்திருக்க வேண்டும் என்கின்றனர். 40 சதவீதம், 35 சதவீதம் பாதிக்கப்பட்ட விவசாயிகளை கணக்கெடுப்பில் சேர்க்கவில்லை. இதனால் வாழை விலை உயர்ந்துவிட்டது என விவசாயிகள் தெரிவித்தனர்.

## வேளாண் வணிக துறை சார்பில் விவசாயிகளுக்கு ரூ.5.22 லட்சம் பொருளீட்டுக் கடன்

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மதிப்பீட்டுக் குழுத்தலைவர் நாராயணன் தலைமை வகித்தார். கலெக்டர் மனோகரன் முன்னிலை வகித்தார்.

இதில் அரசுத்துறை அலுவலர்களுடன் மதிப்பீட்டுக் குழு துறைகள் வாரியாக திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. பின்னர் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் விற்பனைக் குழு விவசாயிகள் 4 பேருக்கு ரூ.5.22 லட்சம் மதிப்பில் பொருளீட்டுக் கடன் பெறுவதற்கான காசோலைகள் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சுப்ரமணியன், எம்எல்ஏக்கள் கார்த்திக்தொண்டைமான், விஜயபாஸ்கர், ராஜநாயகம், மாவட்ட ஊராட்சித் தலைவர் ராமையா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## 27ல் விவசாயிகள்குறைதீர் கூட்டம்

நாகை,: நாகை மாவ ட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 28ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. நிர்வாக காரணங்களால் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 27ம் தேதி கலெக்டர் அலுவலக முதன் மை கூட்டரங்கில் கலெக்டர் தலை மையில் நடைபெறும். விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்து பயனடையலாம் என கலெக்டர் முனுசாமி தெரிவித்துள்ளார்.

## வேளாண் விற்பனை ஆணையர் மார்க்கெட் கமிட்டியில் ஆய்வு

உளுந்தூர்பேட்டை,: உளுந்தூர்பேட்டையில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் இயங்கி வருகிறது. இதில் 100க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் விவசாய பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். இதனை நேற்று காலை மாநில வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை ஆணையர் அனில்மேஷ்ராம் திடீர் ஆய்வு மேற்கொண்டார். ஊரக வணிகமையம் உள்ளிட்ட புதிய கட்டிடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் முகம்மதுகனி தலைமையில் ஒரு கோரிக்கை மனு அளித்தனர். அதில் உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டிக்கு சாக்கு பற்றாக்குறை உள்ளது. இதனை போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு போதிய கழிப்பறை வசதி, தங்கும் விடுதி, குடிநீர் வசதி, சாலை மற்றும் விளக்கு வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துதரவேண் டும் என கோரிக்கை மனு வினை அளித்தனர். இந்த ஆய்வுகளின் போது விழுப்புரம் மாவட்ட விற்பனை குழு தனி அலுவலர் சண் முகம், விற்பனை குழு செய லாளர் ஞானவேல் உளுந்தூர்பேட்டை கண்காணிப் பாளர் சிவநேசன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## தென்னை சாகுபடி கருத்தரங்கு விழா

சோமனூர், : சோமனூர் அடுத்துள்ள கரவளி மாதப்பூர் திருமண மண்டபத்தில் சூலூர் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் தென்னை சாகுபடி குறித்த கருத்தரங்கு கூட்டம் நடைபெற்றது. சூலூர் ஒன்றிய தலைவர் மாதப்பூர் பாலு தலைமை வகித்தார். சூலூர் வேளாண்மை உதவி இயக்குநர் உஷாமைதிலி அனைவரையும் வரவேற்றார். கோவை வேளாண்பல்கலை பேராசிரியர் ஜான்சன், கரவளி மாதப்பூர் ஊராட்சி தலைவர் ஹரிகிருஷ்ணன், சூலூர் அட்மா தலைவர் ஜெகநாதன், கோவை மாவட்ட விவசாய சங்கத்தலைவர் சண்முகம், தங்கராஜ், சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் ஆழியார் தென்னை ஆராய்ச்சிநிலையப் பேராசிரியர் ராஜமாணிக்கம், சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது: இயற்கை உரமான மாட்டு சாணத்தில் கூட கலப்படம் நடைபெருகின்றது. விவசாயிகள் கவனத்துடன் செயல்படவேண்டும். கேரளமாநிலத்தில் உள்ள தென்னை மரங்களுக்கு வாடல்நோய் பரவிவருகிறது. குறிப்பாக திருச்சூர், பாலக்காடு ஆகிய பகுதிகளில் அதிகம் உள்ளது. இதனால் அந்தப்பகுதியில் தென்னை நாற்றுகள் வாங்குவதை தவிர்க்கவேண்டும். தென்னை மரங்களுக்கு நோய் ஏற்பட்டால் தென்னை ஆராய்ச்சி நிலையத்தை

அணுகி, நோய்க்கு ஏற்ற மருந்துகளை மட்டும் பயன்படுத்தவேண்டும். களைக்கொல்லிகளை தவிர்க்கவேண்டும். விவசாயிகள் ஒற்றுமையுடன் இருந்து செயல்படவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முடிவில் துணை வேளாண்மை அலுவலர் திப்பையன் நன்றி கூறினார்.

## மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்க வேண்டும் முதல்வருக்கு மனு

திருத்துறைப்பூண்டி,: திருவாரூர் மாவட்ட கிழக்கு மனித உரிமை கழகத் தலைவர் திருத்துறைப்பூண்டி வக்கீல் நாகராஜன், தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியதாவது,

திருவாரூர், நாகை மாவட்டங்களில் விவசாயத்தை அடுத்து கால்நடைகளை வளர்த்து பால் உற்பத்தி செய்து பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. கடந்த ஓராண்டாக தீவனம், வைக்கோல், புண்ணாக்கு ஆகியவை அதிக விலையில் விற்கப்படுகின்றன. 70 கிலோ ஒரு மூட்டைத் தீவனம் ரூ.600 என விற்கப்பட்டது. தற்போது 1,140 என விற்கப்படுகின்றது. தற்போது நெல் சாகுபடி பொய்த்தமையால் வைக்கோலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ரூபாய் 50க்கு விற்ற ஒரு கட்டு வைக்கோல் ரூ.250 என விற்கிறது. புண்ணாக்கு ஒரு கிலோ ரூ. 50 என விற்கிறது. இதனால் கால்நடை வளர்ப்பது பெரும் கேள்விக்குறியாக உள்ளது. இதனால் பால் உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுகிறது. தமிழ்நாடு பால் கூட்டுறவு ஆவின் நிறுவனத்தார் அதிக அளவு கால்நடை தீவனங்களை உற்பத்தி செய்யாததே தீவன விலை உயர்வுக்கு காரணமாகும். எனவே தமிழக அரசு உடனே ஆவின் தீவன உற்பத்தியை பன்மடங்கு அதிகரித்தும், மற்ற மாவட்டங்களிலிருந்தும் வைக்கோல் கட்டுகளை வரவழைத்தும் குறைந்த விலைக்கு கால்நடை வளர்ப்போருக்கு வழங்க வேண்டும். இவ்வாறு வக்கீல் நாகராஜன் தெரிவித்துள்ளார்.

## பருத்தி பண்ணை பயிற்சி முகாம்

திண்டுக்கல், : ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் அட்மா திட்டத்தின் கீழ் ஆலத்தூரான்பட்டி கிராமத்தில் மருதமுத்து விவசாயி தோட்டத்தில் பருத்திப் பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம் நடைபெற்றது.

மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார் தலைமை வகித்தார். ரெட்டியார்சத்திரம் வேளாண் உதவி இயக்குநர் விஜயராணி வரவேற்றார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, பருத்தி உழவியல் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கிக் கூறினார். காந்திகிராம பல்கலைக்கழக முதல்வர் செந்தில்வேல், வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப

வல்லுநர் சாகிந்தாஜ் ஆகியோர் பருத்தி விவசாயத்தில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கினர். வேளாண் அலுவலர் பொன்ராஜ் ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் பாலகங்காதர திலகர், தொழில்நுட்ப வல்லுநர்கள் முருகேசன், மருதராஜ் செய்திருந்தனர்.

## பயிர்களை காப்பாற்ற பேச்சிப்பாறை அணை மீண்டும் திறப்பு



நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்தது. அணை பகுதிகளிலும் மழை இருந்ததால் அணைகளுக்கான நீர்வரத்தும் அதிகரித்தது. 3 அடிக்கு கீழ் சென்று கொண்டிருந்த பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1 அடி வரை உயர்ந்து 4 அடியானது. ஆனால், இந்த மழை ஒரே நாளில் ஓய்ந்தது. இதனால் அணைக்கு வரும் நீரின் அளவும் குறைந்தது.

இதனால் கடைசி கட்டமாக பயிர்களுக்கு தண்ணீர் தேவைப்படும் நிலை உருவாகி உள்ளது. இதையடுத்து கடந்த வாரம் அடைக்கப்பட்ட பேச்சிப்பாறை அணை நேற்று அதிகாலை மீண்டும் திறக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் 3.80 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 108 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 291 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 33.10 அடியாக உள்ளது. அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டது. சிற்றார் 1ல் 5.15 அடியாகவும், சிற்றார் 2ல் 5.25 அடியாகவும், பொய்கையில் 6.70 அடியாகவும், மாம்பழத்துறையாறு நீர்மட்டம் 4.92 அடியாகவும் உள்ளது.

## முட்டை விலை உயர்வுக்கு காரணம் என்ன?



நாமக்கல் : நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டத்தில், ஒரு முட்டை விலை 373 காசுகளில் இருந்து 7 காசு உயர்த்தப்பட்டு 380 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. வரலாறு காணாத இந்த விலை உயர்வு குறித்து நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு (என்இசிசி) தலைவர் செல்வராஜ் கூறியதாவது:

வடமாநிலங்களில் முட்டை தேவை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் கோழிக்கறி விலை உயர்ந்துள்ளதால், முட்டை உபயோகம் உயர்ந் துள்ளது. மேலும் தீவண விலையேற்றம், வேலையாட்கள் பற்றாக்குறை, கோழி மருந்துகள் விலையேற்றம் ஆகியவற்றால் உற்பத்தி செலவு 375 பைசா வரை உயர்ந்துள்ளது. இதனால் விலை உயர்வை தவிர்க்க முடியவில்லை என்றார்.

## மாடு வியாபாரிகள் ஸ்டிரைக் 6வது நாளாக நீடிப்பு



பொள்ளாச்சி : தமிழக மாடு வியாபாரிகளின் ஸ்டிரைக் 6வது நாளாக நீடிக்கிறது. தமிழகத்தின் பிற பகுதிகள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து அடிமாடுகள், பொள்ளாச்சிக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு வாரம்தோறும் செவ்வாய் மற்றும் வியாழனில் மாட்டு சந்தை நடக்கிறது. இங்கு சராசரியாக வாரத்துக்கு சுமார் 6 ஆயிரம் மாடுகள் வருகின்றன. இவற்றில் கேரளாவுக்கு 4 ஆயிரம் மாடுகளும், நீலகிரி, கோவைக்கு தலா ஆயிரம் மாடுகளும் செல்கின்றன.

வெளியூர்களில் இருந்து லாரிகளில் மாடுகளை கொண்டு வர சராசரியாக ஒரு மாட்டுக்கு ரூ.2 ஆயிரம் வரை செலவாகிறது. லாரியில் சராசரியாக 22 மாடுகள் வரை வியாபாரிகள் ஏற்றி வருகின்றனர். ஆனால், 16 மாடுகளுக்கு மேல் ஏற்றி வரும் லாரிகளை போலீசாரும், சில அமைப்பினரும் தடுத்து நிறுத்துகின்றனர். இதனால் மாட்டு சந்தைக்கு லாரிகள் வரவும், கேரளாவுக்கு செல்லவும் சிக்கல் ஏற்படுகிறது.

இதை கண்டித்து பொள்ளாச்சி மாட்டு சந்தையை மையமாக கொண்டு தமிழகத்திலுள்ள 600க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கடந்த 17ம் தேதி முதல் வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். இன்று 6 வது நாளாக வேலை நிறுத்தம் நடக்கவுள்ளது.

பொள்ளாச்சிக்கு மாடுகள் விற்பனைக்கு வரவில்லை. செவ்வாய், வியாழன் சந்தைக்கு நூற்றுக்கணக்கான கறவை மாடுகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருவது வழக்கம். அவர்களும் மாட்டு வியாபாரிகள் ஸ்டிரைக்கிற்கு ஆதரவு தெரிவித்து தங்கள் கறவை மாடுகளை விற்பனைக்கு கொண்டு வரவில்லை. மாட்டு சந்தை வெறிச்சோடி கிடக்கிறது. ஸ்டிரைக் காரணமாக இதுவரை ரூ.40 கோடி மாடு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

23.02.2013 A.M

## பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

**விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது தலைமையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் ஆக்கிரமிப்பு அகற்றம், பாசன வசதி, உர விநியோகம், ஆலை களில் கரும்புக்கு குறித்த நேரத் தில் விவசாயிகளுக்கு பணம் அளிக்க கோருதல் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை மாவட்ட கலெக்டரிடம் தெரிவித்த னர்.

**நவீன இயந்திரம்**

கூட்டத்தில் வயலில் அறுவடை செய்யப் பட்டபின் உள்ள வைக்கோலை கட்டு களாக கட்டுவதற்கான ரூ.1 லட்சத்து 72 ஆயிரத்து 500 அரசு மானித்துடன் கூடிய ரூ.3 லட்சத்து 62 ஆயிரத்து 250 மதிப்பிலான வைக்கோல் கட்டும் இயந்திரத்தை தொண்ட மாந்துறையைச் சேர்ந்த ரகுபதி என்ற விவசாயி க்கு வழங்கினார்.

**கலந்து கொண்டவர்கள்**

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சுப்பிர மணியன், மின்சார வாரிய கண்காணிப்பு பொறி யாளர் வளர்மதி, வேளாண்மை இணை இயக்குநர் சங்கர லிங்கம், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) உமா மகேஸ்வரி, மாவட்ட கலெக் டரின் நேர்முக உதவி யாளர் பன்னீர் செல்வம், வேளாண்மை பொறியியல் செயற் பொறியாளர்மணி மற்றும் அனைத்து துறை உயர் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வறட்சியால் பயிர்கள் பாதிப்பு: விவசாயிகளுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும் கலெக்டர் முனுசாமி தகவல்

நாகப்பட்டினம்

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும் கலெக்டர் முனுசாமி கூறினார்.

நாகை கலெக்டர் முனுசாமி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறி இருப்பதாவது:–

முதல்–அமைச்சர் அறிவிப்பு

காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு சலுகைகளை முதல்–அமைச்சர் அறிவித்துள்ளார். நாகை மாவட்டத்தில் கடந்த ஆண்டு போதிய பருவ மழை பெய்யாததாலும், இடர்பாட்டு பங்கீட்டு முறைப்படி கர்நாடகம் நீர் திறந்து விடாததன் காரணமாகவும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததன் காரணமாகவும் நாகை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அரசு அறிவித்தது.

நாகை மாவட்டத்தில் சம்பா–தாளடி இயல்பான பரப்பான 3 லட்சத்து 30 ஆயிரத்து 31 ஏக்கரில் வறட்சி காரணமாக இந்த ஆண்டு 3 லட்சத்து 24 ஆயிரத்து 178 ஏக்கர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. இதில் 50 சதவீதத்திற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள 1 லட்சத்து 81 ஆயிரத்து 794 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரம் என்ற விகிதத்தில் நிவாரணத்தொகை வழங்கப்படும் என முதல்–அமைச்சர் அறிவித்தார்.

ரூ.272 கோடி

இதற்கென நாகை மாவட்டத்திற்கு ரூ. 272.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிவாரண தொகையை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போர்க்கால அடிப்படையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்க உள்ள விவசாயிகளின் பட்டியல் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களால் போர்க்கால அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்திற்கு முதல்–அமைச்சர் அறிவித்த வறட்சி நிவாரணம் கும்பகோணம மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், பயிர்

காப்பீடு கணக்கு பராமரிக்கும் ஒருங்கிணைப்பு கிளைகளுக்கும் வழங்கப்படும். இந்த தொகையை அந்த வங்கிகளால் சம்பந்தப்பட்ட வங்கிகள் பயன்பெற தகுதி என கண்டறியப்பட்டு விவசாயிகளின் வங்கி கணக்கில் மின்னணு பணம் பரிமாற்றம் மூலம் இத்தொகை வழங்கப்படும். இந்த நிவாரணத்தொகை ஏற்கனவே விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடன் நிலுவைத்தொகையில் சரிசெய்யப்படமாட்டாது.

போர்க்கால அடிப்படையில்...

நாகை மாவட்ட பாசன பகுதிகளில் 50 சதவீதத்திற்கும் குறைவாக நெல் பயிர் இழப்பீடு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு அந்தந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள சராசரி பயிர் இழப்புக்கு ஏற்ப காப்பீடு நிறுவனம் மூலம் நிவாரணம் வழங்கப்படும். பயிர் காப்பீட்டு திட்டத்தில் விரைவாக நிவாரணம் வழங்கும் பொருட்டு பயிர் அறுவடை சோதனை மதிப்பை விரைவாக செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாகை மாவட்ட விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு முதல்–அமைச்சர் அறிவித்த நிவாரணம் போர்க்கால அடிப்படையில் வழங்கப்படும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அணையின் நீர்மட்டம் 4½ அடியாக குறைந்தது இன்னும் 15 நாட்களுக்கு மட்டுமே சிறுவாணி குடிநீர் பில்லூர் அணையில் இருந்து தினமும் 12½ கோடி லிட்டர் குடிநீர் வினியோகம்

கோவை,

சிறுவாணியின் நீர்மட்டம் 4½ அடியாக குறைந்துவிட்டதால், இன்னும் 15 நாட்களுக்கு மட்டுமே சிறுவாணி குடிநீரை வினியோகிக்க முடியும். பில்லூரில் இருந்து தினமும் 12½ கோடி லிட்டர் குடிநீர் வினியோகம் செய்து நிலைமை சமாளிக்கப்படுகிறது.

4½ அடியானது

கோவை நகருக்கு சிறுவாணி, பில்லூர் அணைகளில் இருந்து குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்துப்போனதால் சிறுவாணி அணைப்பகுதியில் நீர்மட்டம் மள,மள என்று குறையத்தொடங்கியது. தினமும் 10 சென்டிமீட்டர் வீதம் அணையின் நீர்மட்டம் குறைந்தது. தற்போது அணையின் நேற்றைய நீர்மட்டம் 4½ அடியாக குறைந்தது. சிறுவாணியில் இருந்து கோவைக்கு நேற்று 31.6 எம்.எல்.டி.(3 கோடியே 10 லட்சம் லிட்டர்) குடிநீர் வினியோகம் செய்யப்பட்டது.

15 நாட்களுக்கு மட்டும்

கோவையில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு மழை பெய்தபோது, சிறுவாணி அணைப்பகுதியில் 2 மில்லி மீட்டரும், அணைக்கு வெளிப்பகுதியில் 18 மில்லி மீட்டரும் மழை பெய்தது. இந்த மழையினால் சிறுவாணி அணை நீர்மட்டம் உயரவில்லை. தற்போது சிறுவாணி அணைப்பகுதியில் வெயில் அடித்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் மேலும் குறையத்தொடங்கி உள்ளது. இதே நிலை நீடித்தால் 15 நாட்களுக்கு மட்டுமே, அதாவது மார்ச் மாதம் 5–ந்தேதிவரை மட்டுமே சிறுவாணியில் இருந்து குடிநீரை வினியோகிக்க முடியும் என்று தெரிகிறது.

பில்லூர் குடிநீர்

கோவை நகரின் குடிநீர் பிரச்சினை குறித்து அதிகாரிகள் கூறியதாவது:–

சிறுவாணியில் தண்ணீர் குறைந்தாலும், பில்லூர் அணையில் போதிய அளவு தண்ணீர் உள்ளது. பில்லூர் முதல் மற்றும் 2–வது கட்ட திட்டங்களில் இருந்து கோவைக்கு தினமும் 12½ கோடி லிட்டர்(12½ எம்.எல்.டி.) குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. சிறுவாணி குடிநீர் குழாய் செல்லும் பகுதிகளிலும் இணைப்பு ஏற்படுத்தப்பட்டு பில்லூர் குடிநீர் வழங்கப்படுவதால் நிலைமை சமாளிக்கப்படுகிறது.

சிறுவாணி குடிநீரை மட்டுமே நம்பியுள்ள செல்வபுரம், கோவைப்புதூர் உள்ளிட்ட கோவை தெற்கு பகுதியில் நிலைமை சமாளிக்கப்படும். சிறுவாணி முழுவதும் வற்றினால் மட்டுமே இந்த பகுதிகளில் பிரச்சினை ஏற்படும். இருந்தாலும் மாற்று நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதுதவிர ஆழியார் குடிநீர் திட்ட பகுதிகளில் குறிச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. மின்தடை ஏற்படும்போது ஜெனரேட்டர் மூலம் மோட்டார்களை இயக்கி தடைபடாமல் குடிநீர் வினியோகத்துக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தென்னை பயிடும் விவசாயிகள் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கலாம் கலெக்டர் அறிவிப்பு

வேலூர்,

தென்னை பயிடும் விவசாயிகள் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பிக்கலாம்

வேலூர் மாவட்ட தென்னை விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு இணங்க, விரைவில் குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி ஆகிய இடங்களில் தென்னை கொப்பரைக் கொள்முதல் நிலையம், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாக அமைக்கப்பட உள்ளது. விவசாயிகளிடமிருந்து தென்னை கொப்பரை கொள்முதல் தொடங்குவதற்கு முன் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை தென்னை பயிடும் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்பட உள்ளது.

இந்த அடையாள அட்டை முதற்கட்டமாக, குறைந்த பட்சம் 0.50 ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு, காய்க்கும் பருவத்திலுள்ள நில உடைமையாளர்களுக்கு மட்டும் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. அடையாள அட்டை பெறுவதற்குரிய விண்ணப்பபடிவங்களை வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் 25.2.2013 முதல் வழங்கப்படும். விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து செய்து, 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

கொள்முதல் நிலையங்கள் தொடக்கம்

வேளாண்மைத்துறை அலுவலர்கள் விண்ணப்பதாரர்களின் தென்னந்தோப்பினை ஆய்வு செய்து, விவரங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர் அடையாள அட்டை வழங்கப்படும். அடையாள அட்டையில் விவசாயிகளின் சுய விவரங்கள், நில உடைமை விவரம், தென்னை ரகம் மற்றும் மரங்களின் எண்ணிக்கை, எதிர்நோக்கும் மகசூல் மற்றும் அனுமதிக்கப்பட்ட கொப்பரை அளவு ஆகிய விவரங்கள் இடம் பெறும். அடையாள அட்டை வழங்கப்பட்ட பின்னர் கொள்முதல் நிலையங்கள் செயல்பட தொடங்கும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை வரலாறு காணாத உயர்வு; 380 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த 11ந் தேதி 370 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நேற்று முன்தினம் முட்டையின் கொள்முதல் விலையை 3 காசுகள் உயர்த்தினர். எனவே முட்டை விலை 373 காசுகள் என்ற புதிய உச்சத்தை தொட்டது.இந்நிலையில் நாமக்கல்லில் நேற்று நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் விலை அதிரடியாக 7 காசுகள் உயர்த்தப்பட்டு, 380 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இது நாமக்கல் மண்டலத்தில் வரலாறு காணாத விலை உயர்வு ஆகும்.

பிற மண்டலங்களில் முட் டை விலை (காசுகளில்) வருமாறு: ஐதராபாத்351, விஜயவாடா, தனுகு351, பார்வாலா380, சென்னை378, மைசூர்369, பெங்களூர்365, மும்பை384, டெல்லி400, கொல்கத்தா405. கறிக்கோழி கிலோ ரூ.72க்கும், முட்டைக்கோழி விலை கிலோ ரூ.47க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விலையில்லா கறவை பசுக்கள், ஆடுகளுக்கு குடற்புழு நீக்கும் முகாம் கலெக்டர் தொடங்கி வைத்தார்

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி அருகே உள்ள பையனப்பள்ளியில் விலையில்லா கறவை பசுக்கள், ஆடுகளுக்கு குடற்புழு நீக்கும் முகாமை கலெக்டர் ராஜேஷ் தொடங்கி வைத்தார்.

**குடற்புழு நீக்கும் முகாம்**

தமிழக அரசின் திறப்புத் திட்டங்களின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு குடல்புழு நீக்குதல் மற்றும் மருத்துவ பரிசோதனை முகாம் பையனப்பள்ளி கிராமத்தில் 2 நாட்கள் நடக்கிறது.

நேற்று கறவை பசுக்கள் மற்றும் ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து வழங்கி முகாமை மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தொடங்கி வைத்தார். இந்தநிகழ்ச்சியில் இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு துறை)அசோகன், உதவி இயக்குநர் கந்தசாமி, தாசில்தார் மகேஸ்வரன், கால்நடை மருத்துவர்கள் மற்றும் மருத்துவக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர் செல்வி செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முகாமை தொடங்கி வைத்து கலெக்டர் கூறியதாவது:

**ஊக்கப்பரிசு**

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும். கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு 2012 ஏப்ரல் 13 மற்றும் 14ம் தேதிகளில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் கால்நடைகளை சிறப்பாக பராமரிப்பவர்களை ஊக்குவிக்க பரிசளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும் தமிழகம் முழுவதும் இந்த முகாம் நடக்கிறது.

இவ்வாறு கலெக்டர் கூறினார்.

இந்த முகாமில் குடற்புழு நீக்கம், சினைபரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல் போன்றவை மேற்கொள்ளப்பட்டது. இம்முகாம் இன்று (சனிக்கிழமையும்) நடக்கிறது.